★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 புரட்டாதி 30 முஹறம் 9 இதழ் 245

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 16 10 83

## ராணுவத்துக்கும் அகதிகள் கூடாரங்கள் வழங்கப்பட்டன!

### பிரட்மன் வீரக்கோன் தகவல்

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற இனக்கலவரங்களினல் பாதிக்கப்ட்ட அகதிகளுக்காக வெளிநாடுகள் வழங்கிய கூடாரங்களில் எழுபத்தைந்து இராணுவத்தினருக்கு வழங்ப்பட்டதென்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூடாரங்கள் யாழ்ப்பாணத்தில் சில பகுதிகளிலிருந்து மூடப்பட்ட முகாம்களிலிருந்த இராணுவத்தினரின் பாவிப்புக்கே வழங்கப்பட்டுள்ளன என்றும், இது சம்பந்தமாக இவற்றை வழங்கிய யூ. எஸ். எஜிட்நிறுவனத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுஎன்றும் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

இனக்கலவர அகதிகளுக்காக வெளிநாடுகள் உதவியாக இலங்கைக்கு வழங்கியபொருட்களின் விநியோகம் தொடர்பாக வெளியிட்டுள்ள விரிவான அறிக்கையொன்றிலேயே இதனைத் தெரிவித்துள்

(8-ம் பக்கம் பார்க்க)

# 'இலங்கை தமிழர் பிரச்னையில் ஆபத்தான சூழ்நிலை!

## தீவிரபோக்கை ஜே. ஆர். கைவிட்டு

## தமிழ்த்தலைவர்களுடன் பேசவேண்டும்!!'

### செய்தியாளர்களிடம் இந்திரா

(புதுடில்லி)

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னை தொடர்பாக ஆபத்தான சூழ்நிலை உருவாகி வருகிறது. இந்நிலையில் இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் அவரது கட்சியினரும் தமிழ் மக்களின் பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காண்பதற்கு இவ்விவகாரத்தில் தமது அணுகுமுறையை பரிசீலனைசெய்து தமிழ் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும்'' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்றுத் தெரிவித்தார்.

புதுடில்லியில் பத்திரிகையாளர்களிடமே இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழ் பேசும் மக்களின் பாராளுமன்றப்பிரதிநிதிகளின் பதவிகள் பறிபோகக்கூடிய நிலை தோன்றியுள்ளதே இன்றைய ஆபத்தானசூழ்நிலைக்குக் காரணம் என்றுத் இது கவலைக்குரிய நிலை என்றும் திருமதி காந்தி தெரிவித்துள்ளார்.

#### 'தீவிர போக்கை கைவிடவேண்டும்'

இந்நிலையில் திரு. ஜெயவர்த்தனவும் அவரது கட்சியினரும் தமது தீவிரவாதப்போக்கைக் கைவிட்டுத் தமிழ் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழ் மக்களின் பிரச்னைக்குத் தீர்வு காண்பார்கள் எனத் தாம் நம்புவதாகவும் திருமதி காந்தி கூறினர்.

இலங்கையிலிருந்து மக்கள் லட்சக்கணக்கில் அகதிகளாக இந்தியாவுக்கு வரும்பட்சத்தில் அவர்களை ஏற்றுக்கொள்ள இந்தியா தயாராக இல்லை என்றும் திருமதி காந்தி தெரிவித்தார்.

திருமதி காந்தி இலங்கைத் தமிழ் மக்களின் விவகாரம் குறித்து புதுடில்லியில் பத்திரிகையாளர்களிடம் மேலும் கூறியதாவது;

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற இனக்கலவரங்களினல் இலங்கைத் தமிழ் மக்கள் மட்டுமல்ல, இலங்கையிலுள்ள இந்தியப் பிரஜைகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவே இந்தியாவின் கவலையை அதிகரித்தமைக்குக் காரணமாகும்.

#### பார்த்தசாரதியின் விஜயம்

திரு. ஜி. பார்த்தசாரதியின் இலங்கை விஜயத்துக்கான

(8ம் பக்கம் பார்க்க)

### ★ இந்திராவின் அரசியல் வரலாற்றில் நீண்டநேரம் நடந்த பத்திரிகையாளர் மாநாடு

(புதுடில்லி)

இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அரசியல் வரலாற்றில் அவர் நேற்று புதுடில்லியில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாடே மிக நீண்ட நேரம் நடைபெற்றதென புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் 2 மணித்தியாலமாக நடைபெற்ற இம்மகாநாட்டில் நிருபர்கள் எழுப்பிய சுமார்

(8ச் பக்கம் பார்க்க)

### ஆசிரியர் பிரச்னை இன்று

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த ஆசிரியர்களின் எதிர்காலம் குறித்து ஆராயும் பொருட்டு தமிழர் ஆசிரியர் சங்கம் இன்று 16ம் திகதி யாழ்ப்பாணத்தில் கூடுகிறது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 1மணிக்கு நடைபெறும் இக்கூட்டத்திற்கு சகல இடம்பெயர்ந்த ஆசிரியர்களையும் சமூகந்தருமாறு மேற்படி சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் கோரிக்கை விடுத்துள்ளார்.

### மீண்டும் 'ஈழநாடு' வாரமலர்

மீண்டும் புதுப்பொலிவுடன் 'ஈழநாடு' வாரமலர் வெளிவர இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து தமிழ், முஸ்லிம எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் மற்றும்ஆய்வாளர்களிடமிருந்து பல்வேறு ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன.

வாரமலர் தொடர்பான வாசகர்களின் ஆலோசனைகளும் பங்களிப்பும் ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆசிரியர்,
ஈழநாடு வாரமலர்,

### அமைச்சர் இராசுவின் செயலாளருக்கு சூடு!

(மட்டக்களப்பு)

அமைச்சர் செ. இராசதுரையின் மட்டக்களப்பு தொகுதி எம். பி.க்கான செயலாளர் றெட்டி பிரான்ஸிஸ் நேற்று இரவு சுமார் 8 மணியளவில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானர்.

மட்டக்களப்பு புளியந்தீவிலுள்ள தனது இல்லத்தில் இருந்தபோதே இவர் சூட்டுக்கு இலககானர் அங்கு சென்ற இனந்தெரியாத இளைஞர்கள் துப்பாக்கியினல் இவரைச் சுட்டதாகப் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட இவருக்கு அங்கு சத்திரசிகிச்சை உடனடியாக செய்யப்பட்டது.

### தவறிவிட்டது

எனது இரும்புப் பெட்டி சாவியும் மற்றும் சில பொருட்களும் மட்டுவிலிலிருந்து நல்லூர்வரைக்கும் உள்ள ரோட்டில் மோட்டார் சைக்கிளில் வரும்பொழுது தவறிவிட்டது. கண்டெடுத்து தருபவர்கட்கு தகுந்த சன்மானம்வழங்கப்படும்.

விலாசம்:

ச. நந்தகோபால்
ரூபி யுவலர்ஸ்
111/1,கஸ்தூரியார்வீதி
யாழ்ப்பாணம்.

(9318)

### தமிழர் பிரச்னை: அரசு கூட்டும் மகாநாடு!

### தமிழர் கூட்டணிக்கு அழைப்பில்லை!!

(கொழும்பு)

தமிழர் பிரச்னை தொடர்பான மகாநாடொன்று வரும் புதன்கிழமை நடைபெறவிருக்கிறது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளும்படி இலங்கையின் பிரதான் எதிர்க்கட்சிகள் நான்குக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்தரக்கட்சி, சமசமாஜீக்கட்சி, மக்கள் ஐக்கியமுன்னணி, இலங்கை கம்யூனிஸ்கட்சி ஆகியவற்றுக்கே அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது,

தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு இந்த அழைப்பு விடுக்கப்படவில்லை. (சூ)

இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, ஸ்பெயின், கனடா, ஹோலண்ட், சிங்கப் ர், அவுஸ்திரேலியா முதலான நாடுகளுக்கு சிரமமின்றிச் செல்வதற்கான ஆலோசனைகளும், விமான ரிக்கற்றுகளும், பிரயாண ஒழுங்குகளும் துரிதமாகச் செய்துகொடுக்கப்படும்.



எயார்-ட்ராண்சிற்

AIR-TRANSIT

TRAVEL-CONSULTANTS

பயண ஆலோசகர்கள்
(ஆஸ்பத்திரிக்கு முன்பாக)

538 B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

99 — 2/56B கபூர் பில்டிங், 2-வது மாடி, கொழும்பு - 1. போன்: 549365

(9290)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மேற்கில் மூளாய் றோட்டில் பிரதான வீதியில் நாலு பரப்புக் காணி மின்சார வசதியுடன் விற்பனைக்குண்டு. வீடு கட்ட வசதியான இடம். தொடர்பு கொள்ளவும். R. K. ரவீந்திரன், அதிகார்வளவு, ஆனைக்கோட்டை. 9106

---

புதிய Adler (Portable) ஆங்கில தட்டச்சு யந்திரம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:-மருதலிங்கம், 8/1 அம்மன் வீதி, கந்தர்மடம். யாழ்ப்பாணம். 9333

---

யாழ். சுண்டிக்குழி 21/2A ஈச்சமோட்டை வீதியில் ஒன்றரைப் பரப்புக்காணி சிறுவீடு. கிணறு, மலசலகூட வசதியுடன் உடன் விற் னைக்குண்டு சு. மகேஸ்வரி, 6/4, கண்ணுதிட்டி ஒழுங்கை, யாழ்.நகர். 9331

---

சங்கானை பழைய தபாற் கந்தோருக்கு அருகில் சுமார் 6¼ பரப்புக் காணி இரு பக்கச் சுற்றுமதில், நல்ல தண்ணீர் கிணறு, குளியல்அறை, விசாலமான அறையுடன் கூடிய சமையல்அறை, கார்கரேச்சுடன் முழுதாக அல்லது பகுதியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: S. கந்தசாமி, 89, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 9330

---

பாவனையில்உள்ள Zமொடல் 'ஒபல்'கார் விற்பனைக்குண்டு. பெயர்மாற்றம் செய்துதரப்படும். விலை ரூ. 400 /- தொடர்புகொள்க:- 68 B, கன்னுதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 9259

---

நல்ல இன அல்சேஷன் நாய் (ஆண்) விற்பனைக்குண்டு. 513, காங்கேசன்துறை வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணம். 9326

---

ஊரெழு கிழக்கு பிள்ளையார் கோயிலுக்கு எதிராக உள்ள ஒழுங்கையில் 250 யாருக்கப்பால் வீடு கட்டக்கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: எதிர்மனசிங்கம், ஊரெழு; சுன்னுகம். 9270

---

கைதடி சந்தியிலிருந்து ½ மைல் தூரத்தில் கண்டி வீதியில் தொழிற்சாலை அமைப்பதற்கு அல்லது விவசாயம் செய்வதற்கேற்ற 26 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. உதயன் 2 B.A. தம்பிலேன், வண்ணார்பண்ணை. 9294

---

கீரிமலை வீதியில் மாவிட்டபுரத்தில் சீமெந்து தொழிற்சாலைக்கு அண்மையில் 9 பரப்பு காணி, 3 பகுதி மின்இணைப்புடன் உண்டு. விபரங்களுக்கு: ஷப்ரு, 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 9303

---

Toshiba Betamax வீடியோடெக் புத்தம்புதிய நிலையில் உள்ளது விற்பனைக்கு விபரங்கட்கு: T. S. தர்மலிங்கம், கோப்பாய் தெற்கு. கோப்பாய். (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு அருகாமையில்) 9313

---

கந்தர்மடம், மணத்தறை லேனில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். அ. கந்தசாமி 22, சிவன் கோயில் றோட், திருநெல்வேலி தெற்கு. 9296

## விற்பனைக்கு

நல்லநிலமையுடைய 10 அந்தர் பாரம் ஏற்றக்கூடிய ரெயிலர் விற்பனைக்கு உண்டு. மில்க்வைற், யாழ்ப்பாணம். 9314

---

நல்லின அல்சேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. 76, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம். 9321

---

3 1/3 பரப்புக்காணி சிறுப்பிட்டி, யாழ்-பருத்தித்துறை பிரதான வீதி அருகில் ''ஸ்ரீகிருஷ்ணஸ் கிறைண்டிங் மில்'' முன்னிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: ந. சின்னையா, 'வாணி அகம்', சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி. 9338

---

Bedford டீஸல் தகரப்பொடி டெலிவரி வான் (Single rear Wheels four Cylinders) நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. ஞாயிற்றுக்கிழமையும், திங்கட்கிழமையும் காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்குமிடையில் C. S. Murugaiahpillai, 72/2, Railway East Lane, (Near Hindu Ladies College Leval Crossing) Kandarmadam என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். 9317

---

பலாலி மேற்கில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வளவும் (பரப்பு 1½), தோட்டக்காணி 10¾ பரப்பும் உடன் விற்பனைக்குண்டு. நா. நடராசா, இ. போ. ச. சாரதி, பலாலி, மேற்கு வசாவிளான். 9295

---

பாவிப்பிலுள்ள சீ-நோர் சிறிய வள்ளம், பதினொரு முழ மரம் (அல்விசா) ஐந்து கட்டி, 15 ஹோஸ் பவர் (யமஹா) மோட்டார், இன்னும் வேறு மோட்டர்களும் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். சு. கந்தசாமி அன்ரன் ரேடர்ஸ் பழைய கண்டி காரைநகர். 9292

---

மண்கும்பான் கிழக்கில் 230 நெற்பரப்பு வெறுங்காணி யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை றோட்டருகில் விற்பனைக்குண்டு. தென்னந்தோட்டம் அல்லது வயல் செய்வதற்கு உகந்தது (யாழ்ப்பாணம் டவுனிலிருந்து 5 மைல் தொலைவில் உள்ளது.) அத்துடன் மண்கும்பான் கிழக்கு சிவகாமியம்மன் கோவிலடியில் 5¼பரப்பு குடியிருப்பு காணி விற்பனைக்குண்டு. றோட்டருகில் மின்சார வசதியும் உண்டு. விபரங்களுக்கு;- 3/9, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 9276

---

அச்சகத் தொழிலில் ஈடுபட விரும்புவோருக்குஅரியசந்தர்ப்பம். சிலிண்டர் மெஷின், பிறேற்றின் மெஸின்கள், கட்டிங் மெஸின், பெப்பெறேற்றிவ் மெஸின், புறூவ் மெஸின் உட்பட ஒரு அச்சகத்திற்குரிய சகல மெஸின்களும் விற்பனைக்கு உண்டு. 'குருபவனம்' கண்டி வீதி, சாவகச்சேரியில் பார்வையிடலாம். (சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் உள்ள இல்லம்) 9224

---

கோண்டாவில் கிழக்கு எம். எஸ். இன்டஸ்றீஸ் லிமிட்டெட்டுக்கு (ஆணித் தொழிற்சாலை) அருகாமையில் 10¾ பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கனகராசா பஞ்சலிங்கம், செல்வநாயகம் வீதி, கோண்டாவில் கிழக்கு. 9235

## விற்பனைக்கு

புத்தம் புதிய National 17'' Black and White டெலிவிஷன் ஒன்றும்-நல்லநிலையில்பாவித்துக்கொண்டிருக்கும் Phillips 27'' Super Colour டெலிவிஷன் ஒன்றும் விற்பனைக்குண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். விலை விபரங்களுக்கு: யஸ்ரின் பஸ்தியாம்பிள்ளை, 21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 9223

## தேவை

மணமகள் தேவை. இந்து வேளாள குல, 29 வயது நிறைந்த யாழ். நகரில் சொந்த வர்த்தகம் செய்யும் மணமகனுக்கு 25 வயதுக்குட்பட்ட அதேகுலத்தைச்சேர்ந்த பெண் தேவை. கடித மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 9320, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 9320

---

பருத்தித்துறையிலுள்ள ஆங்கில வைத்தியசாலைக்கு பெண் உதவியாளர் தேவை. 20-10-83ற்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 9219, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9219

---

மணமகன் தேவை: 34 வயது கிறீஸ்தவப் பெண்ணுக்கு மணமகன் தேவை. சீதனமாக கொழும்பில் வீடும் 3லட்சம் பணமும் கொடுக்கப்படும். கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 9216, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9216

---

யாழ். மாநகரசபை எல்லைக்குள் ஒரு அறை / பகுதி வீடு தனி நபருக்கு (இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்) வாடகைக்குத் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 9256, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 9256

---

மூவர் கொண்ட குடும்பத்திற்கு ஒரு சிறிய வீடு அல்லது பகுதி வீடு வாடகைக்குத் தேவை. கிராமப்புறங்களும் விரும்பத்தக்கது. தரகர்களும் கவனிக்கவும். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 9312, C/o ஈழ்நாடு, யாழ்ப்பாணம். 9312

---

கிளிநொச்சி பட்டின எல்லைக்குள் நல்ல வீடு வாடகைக்கு அல்லது விலைக்கு தேவை. R. கோபாலரத்தினம், 125, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி. 9319

---

யாழ். நகரின் நல்ல சுற்றுடலில் 1½ பரப்பு அல்லது 2பரப்பு வீடு கட்டுவதற்குகந்த காணி தேவை. தொடர்பு: 'விளம்பரகாரர்', ஏசியன் அச்சகம், 28, 3ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். 9327

---

எமது தையல் ஸ்தாபனத்தில் தைப்பதற்கு உடுப்புகள் வெட்டிக்கொடுப்பதற்குபெண் கட்டர் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். விவேகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ், 22, பெரிய கடை, யாழ்ப்பாணம். 9328

---

தேங்காய் எண்ணை எக்ஸ்பெல்லர் (Oil Expeller)தேவை: மொடல்(Model) சைஸ் (Size) சகல விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல 9308 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 9308

---

காவலாளர்கள் இருவர் தேவை (குடியிருப்பு வசதி உண்டு) தகுந்த நற்சாட்சிப்பத்திரங்களுடன் 22.10.83 க்கு முன் விண்ணப்பிக்கவும். விமல் அலுமினியம் லிமிட்டட், அல்லைப்பிட்டி. 9283

---

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

## சேவை

திருமணம் மற்றும் சகல விதமான வைபவங்களுக்கும் சிறந்த முறையில் வீடியோ (T V) யிலும் புகைப்படத்திலும் படம்பிடிக்க கொழும்பில் பிரபல்யமான தர்மாஸ் ஸ்ருடியோவை நாடுங்கள் 50. விதானையார் வீதி- சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 23379. (9233)

## வைத்தியம்

சிறுநீரக ரோகங்கள், ரொன்சில் விஷகடி ஆகியவற்றுக்கு உத்தரவாதமான சிகிச்சை பெற Dr. J. Constantine, சங்கானை றோட், அச்சுவேலி. 8953

## பயிற்சி

Greek கப்பல்களில் வேலை வாய்ப்பு முன்னுரிமையும், பதவி உயர்வும் பெற Spoken Greek குறுகியகால பயிற்சி நெறி. இல. 12, கோபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 9238

## வகுப்புகள்

Piano வும், Accordian னும் சனி, ஞாயிறு உட்பட. திருமதி தோமஸ், கதிரை மாதா கோவிலின் வாயிற்புற வீதி, சில்லாலை. (மகளிர் மட்டும்). 8914

## வாடகைக்கு

நவீன வசதிகளுடனமைந்த வீடு வாடகைக்கும், கடை கட்டுவதற்கான காணி குத்தகைக்கும் சிவன்கோவிலடி வண்ணார் பண்ணையிலுண்டு. இன்று காலை 9 மணி— மாலை 6 மணி நேரே தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 67, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். 9337

## WANTED

Medical Officer/RMP for practice at Vavuniya. Apply with bio-data. Advt. 9272' c/o Elanadu, Jaffna. 9272

---

Jaffna based Firm Requires: 1. Technicians to handle Servicing and Repairs to Photocopying Machines, Electronic Calculators and Typewriters. 2. Workers experienced in manufacture of Steel Cupboards, Cabinets, Iron Safes and other allied equipments furniture. 3. Trainee Technician with G. C. E. qualification with apptitude in Electronics. Selected persons will have to pay Cash Security and enter into Bond before training given by Principals in Colombo. 4. Trainee Sales / Office Clerks with good knowledge of English Typing preferable. Starting salary Rs: 300-00. Apply in own handwriting, stating experience with testimonials to 484, Hospital Road, Jaffna. 9289

## கல்வி

G C. E (O/L), G.C.E. (A/L), கலை, விஞ்ஞானம், வர்த்தகம்1984, 1985; Typing, Shorthand, 1984 Pitman Exam London; G S.Q. (Bio), B. Sc (Bio) 1984, 1985 பாலர் பயிற்சி ஆசிரியர் வகுப்பு (Montessori Diploma Teacher's Training Course) 1984; 3-11-1983 ஆரம்பமாகின்றது. 30-10-83ற்கு முன் விண்ணப்பிக்கவும். வசதி குறைந்தவர்களுக்கு சில சலுகைகள் கொடுக்கப்படும். இக்கல்லூரி கல்வித்திணைக்களத்தால் விஞ்ஞான ஆய்வுகூடம் உட்பட அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட பாடசாலையாகும். விபரத்துக்கு; அதிபர், உயர்கலைக் கல்லூரி, 73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 9278

---

யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்

### ஏலவிற்பனை
### அறிவித்தல்

யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதியில் டீ/17, டீ/18, டீ/19 என குறியிடப்பட்ட மூன்று மலைவேம்பு (மஹோகனி) மரங்களை 24-10-83 ஆம் திகதி மு. ப. 9-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

சிததி பெற்ற கேள்விக்காரர் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி மரத்தையும் பாதுகாப்பாகத் தறித்து மூன்று நாட்களுக்குள் அப்புறப்படுத்த வேண்டும்.

**சி. வீ. கே. சிவஞானம்,**
யாநகராட்சி மன்ற
ஆணையாளர்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யழப்பாணம்.
14-10-83. 9334

---

இன்று புதிதாய்ப்
பிறக்கிறது!

Iyads

விளம்பரத்தைக் கலையாக்கும் நீங்கள் செய்வதை விலையாக்கும்

**ஐ-அட்ஸ்**

விளம்பரசேவை
விற்பன்னம் இப்போது யாழ்.நகரில்!

தொழிலதிபர்கள்,
வர்த்தகர்கள்,

விளம்பர இல: 9341,
மே/பா, 'ஈழநாடு',
யாழ்ப்பாணம் முகவரிக்கு
உடன் எழுதுங்கள்.
9341)

---

## அறிவித்தல்

இல. 181/5 பொன்னம்பலம் (மின்சார நிலைய) வீதியில் இயங்கி வந்த எமது மரக்காலை

**57/18 - ஸ்ரான்லி வீதிக்கு**

(இலங்கை வங்கிக்கு முன்பாக)

**16-9-1983** தொடக்கம் மாற்றப்பட்டுள்ளதை எமது வாடிக்கையாளர்கள், மற்றையோருக்கும் அறியத் தருகிறோம். உங்களுக்கு வேண்டிய பலகை முதலியன யாவும் எதுவித தாமதமுமின்றிப் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று வரை நீங்கள் எமக்கு ஆதரவு தந்தமைக்கு மனமுவந்த நன்றியைத் தெரிவித்துத் தொடர்ந்தும் உங்களது கூடுதலான ஆதரவை நல்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**என். வைத்திலிங்கம்**
**அன் கம்பனி லிமிட்.**

9305

# ஐரோப்பாவில் ஏவுகணைகளைத் தவிர்க்கும்படி

# வார்ஸோ, நேட்டோவிடம் கோரிக்கை!

சோபியா, அக். 15

ஐரோப்பாவின் நடுத்தர அணு ஆயுத ஏவுகணைகளை நிறுவவேண்டாமென்றும், அணு ஆயுத உற்பத்தியைக் குறைக்கும்படியும் வார்ஸோ ஒப்பந்த நாடுகள் 'நேட்டோ' நாடுகளைக் கோரியுள்ளன.

பல்கேரியாவின் தலைநகரான சோபியாவில் ஆறுவார்ஸோ அமைப்பு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் கடந்த இரு தினங்களாக விசேட கூட்டமொன்றை நடத்தினர். ஐரோப்பாவில் நேட்டோ நாடுகள் சார்பில் அமெரிக்கா நிறுவ உத்தேசித்துள்ள எம். எக்ஸ் நடுத்தர அணுஆயுத ஏவுகணைகள் குறித்து அவர்கள் ஆராய்ந்தனர். இறுதியாக தமதுகூட்ட முடிவிலேயே அவர்கள் மேற்கண்டவாறு 'நேட்டோ' அமைப்பிடம் கோரிக்கைவிடுத்தனர்.

சோவியத்வெளிநாட்டமைச்சர் திரு. அந்ரேகுரோமிக்கோவும் சோபியாவில் கூடிய ஆறு 'வார்ஸோ' வெளிநாட்டமைச்சர்களில் அடங்குகிறார்.

### தொடரவேண்டும்

'வார்ஸோ' அமைப்பு சார்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: 'ஜெனீவாவில் நடைபெற்றுவரும் அமெரிக்கா சோவியத்துக்கிடையிலான ஆயுதப்பரிகரணப் பேச்சுக்கள் திருப்திகரமாக இல்லாததால் இந்தவருட முடிவில் அப்பேச்சுக்கள் தோல்வியில் முடியும் பட்சத்தில் எதிர்வரும் புதிய ஆண்டிலும் புதிய யோசனைகளுடன் ஜெனிவாப் பேச்சுக்களை இவ்விருநாடுகளும் ஆரம்பிக்க வேண்டும். ஐரோப்பாவில் அமெரிக்கா நடுத்தர ஏவுகணைகளை வைப்பதை எவ்வாறாயினும் நிறுத்தமுன்வரவேண்டும்.

'வார்ஸோ' வெளிநாட்டமைச்சர்கள் உலக பொருளாதார நிலைபற்றியும் சோபியாவில் ஆராய்ந்தனர். வளரும் நாடுகளுக்கு வளர்ச்சியடைந்த நாடுகள் கணிசமானளவு பொருளாதார உதவிகளை வழங்கவேண்டுமென்று ஐ நா. கூட்டத்தொடரில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கும் அவர்கள் வரவேற்பளித்தனர்.

### பரிசோதனை

இதேவேளை அமெரிக்கா அதன் எம். எக்ஸ் அணுசக்தி நடுத்தர ஏவுகணையொன்றை அண்மையில் பரீட்சித்தது. இந்த ஏவுகணையையே அது ஐரோப்பாவில் நிறுவஉத்தேசித்துள்ளது. இவ் ஏவுகணை சுமார் 6,600 கிலோ மீட்டர்கள் தூரம்வரை சென்று தாக்கக்கூடிய வலுவுடையது.

## அணு ஆயுதங்களை எதிர்த்து மேற்கு ஜெர்மனியில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்!

பிராங்பேர்ட், அக். 15

மேற்கு ஜெர்மனியில் அமெரிக்காவின் எம். எக்ஸ் நடுத்தர அணுசக்தி ஏவுகணைகளை நிறுவுவதற்கெதிராக பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

நேற்று இங்குள்ள நகரமொன்றில் நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் சுமார் மூவாயிரம் ஆர்ப்பாட்டகாரர்கள் எம். எக்ஸ் ஏவுகணைகளையும் அணு ஆயுத தயாரிப்புக்களையும் எதிர்த்து. கோஷமெழுப்பிச் சென்றனர். இவர்கள் பதாகைகள், சுலோக அட்டைகள் என்பவற்றையும் தாங்கிச்சென்றனர்.

பல இடங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கட்டுமீறிப் போகாத வகையில் பொலிஸார் கவச வாகனங்களிலும் ஏனைய கலகமடக்கும் வாகனங்களிலும் ஆங்காங்கே ரோந்து சுற்றிவந்தனர்.

இதேவேளை இந்தியா உலக ஆயுதக்குறைப்புப்பிரசாரஇயக்கத்துக்கென பத்து லட்சம் ரூபாவைக் கொடுத்துள்ளது. சோவியத் உட்பட பதினேழு நாடுகள் இவ்வாறு இந்த இயக்கத்துக்கு உதவியுள்ளன. எதிர்வரும் 17-ந் திகதி நியுயோர்க்கில் ஆயுதக்குறைப்புப் பிரசார இயக்கத்தின் மகாநாடொன்று இடம்பெறவுள்ளது. (கி)

## புதுடில்லி ரயில் நிலையத்தில் குண்டுவெடிப்பு: 20 பேர்காயம்

### 24 மணியில் நடந்த மூன்றுவது சம்பவம்!

புதுடில்லி, அக். 15

புதுடில்லி புகையிரத நிலையத்தில் நேற்றுநிகழ்ந்த குண்டுவெடிப்பொன்றில் இருபது பேர் படுகாயமடைந்தனர். புதுடில்லி நகரில் நேற்று இருபத்திநான்கு மணியில் நிகழ்ந்த மூன்றுவது குண்டுவெடிப்புச் சம்பவம் இதுவென்று தெரிவிக்கப்பட்டது.

முதலிரண்டு குண்டுவெடிப்புச்சம்பவங்களும் இருபடமாளிகைகளில் நிகழ்ந்தன. அவற்றில் ஐவர் கொல்லப்பட்டனர். ஒரு தாயும் ஒரு குழந்தையும் அந்த ஐவரில் அடங்கியிருந்தனர்.

இதனைத்தொடர்ந்து புதுடில்லி யில்நிலையத்தில் நேற்று மூன்றுவது குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. டில்லியிலிருந்து லக்னேவுக்குச்செல்லும்மெயில் புகையிரதம் புறப்படுவதற்கு ஒருமணி நேரத்திற்கு முன்னரே இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.

காயமடைந்த 20பேரில் திருமணக் கூட்டமொன்றை சேர்ந்த ஐந்துபேரும் அடங்குகின்றனர். புதுடில்லி ரயில் நிலையத்தில் வெடித்த குண்டு அந்நிலையத்துக்குஅருகில்உள்ள பாலமொன்றின் மீதிருந்தே வீசப்பட்டுள்ளது என்றும்தெரிவிக்கப்பட்டது.

இக்குண்டுவீச்சு சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதுபற்றி எதுவும் அறியப்படவில்லை. வெடிபொருள் நிபுணர்கள் நேற்று புதுடில்லி ரயில் நிலையத்தில் சிதறியிருந்த குண்டின் சிதைவுகளை ஆராய்ச்சிக்காக எடுத்துச்சென்றனர்.

(7-ம் பக்கம் பார்க்க)

## தீர்ப்பு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் நள்ளிரவில் ஒருவர் வீட்டுவளவிற்குள் நடமாடியதாக கைதான சந்தேகநபர் த. தேவராஜா நேற்று யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

கோப்பாயில் சுவாமிநாதர் குமாரசாமி வீட்டுவளவில் நள்ளிரவு 11 மணிக்கு நடமாடியதாக சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி எஸ். அமிர்தலிங்கம் ஆஜரானார். தீர்ப்பு அடுத்த மாதம் 26-ம் தேதிக்கு ஒத்திபோடப்பட்டது. (க)

## ஆக்டிக் பனிக்கட்டிகளில் 56 சோவியத் கப்பல்கள் சிக்கியுள்ளன!

### பலத்த சிரமத்துடன் சிப்பந்திகளை காப்பாற்றும் பணி தொடர்கிறது!

மாஸ்கோ, அக் 15.

சைபீரியாவுக்குவடக்கே ஆக்டிக் சமுத்திரத்தில் 56 சோவியத் கப்பல்கள் பனிக்கட்டிப் படலங்களில் சிக்கியுள்ளன. இவற்றுள் 26 கப்பல்கள் மிகவும் மோசமாகப்பாதிக்கப் பட்டுள்ளன. அத்துடன் அவை விரைவில் பனிக்கட்டிகளால் மூடப்படும் நிலையிலுள்ளன.

சோவியத் கடற்படை அதிகாரி விலாடிமிர் மிக்காலிசென்கோ இதுபற்றித் தெரிவிக்கையில், பனிக்கட்டிகளில் சிக்குண்ட கப்பல்களில் உள்ள உணவுப்பண்டங்கள் விரைவில் தீர்ந்துவிடும் நிலையிலுள்ளதென்றும் இதனுல் அதிலுள்ள சிப்பந்திகள் பெரும் இக்கட்டான நிலைக்குள்ளாகியுள்ளனரென்றும் தெரிவித்தார்.

சுமார் 3 மீட்டர்கள் தடிப்பாக பனிக்கட்டி படிவுகள் காணப்படுகின்றன. இராட்சத கப்பல்களும் மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ளன. ஆனுல் அவற்றின் முயற்சிகள் மெதுவாகவே உள்ளன. ஏனெனில் அப்பனிக்கட்டிப்படிவுகள் இந்த நூற்றுண்டில் எப்போதும் இல்லாதவாறு மிகவும் ஆழமாகவும் கணிசமாகவும் படந்துள்ளன.

அணுசக்தியில் இயக்கும் பனிக்கட்டி உடைக்கும் கப்பல்களும் சிரமப்பட்டே இயங்கிவருகின்றன. ஹெலிகாப்டர்களும் பனிப்புயல்காரணமாக செயலாற்றமுடியாதனவாகவுள்ளன.

'அஞசகயிடக்' என்ற கப்பலில் இருந்து 53 சிப்பந்திகள் காப்பாற்றப்பட்டனர். அவர்கள் தமது கப்பல் பனிக்கட்டிப்படிவுகளில்மோதி உடைந்தபோது காதுகளை செவிடாக்குமளவிற்கு ஓசை எழுந்து தம்மைப்பீதியடையச் செய்ததென்றனர் இவர்கள் இரு தினங்கள் ஆபத்தில் சிக்கியிருந்தனர்.

ஏனைய கப்பல்களில் உள்ளவர்களைச் காப்பாற்றும் பணியும் பலத்த சிரமங்களிடையே நவீன பனிக்கட்டி உடைப்பு கப்பல்களின் உதவியுடன்நடைபெற்று வருகிறது. (கி)


## ரஸ்றட் ரவல் சேர்விஸ்

11/A மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி றேட்,
யாழ். நகர்
T. P. 24111

தலைமைக்கந்தோர்
65, சதாம் வீதி
ஹைதிராமணி ஆர்காட்,
கொழும்பு-1.

உங்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம். அதுவே எங்கள் ஸ்தாபனத்தின் பெயருமாகும்.

- ஏரோபுளட், செக்கோசிலவியா விமானக் கம்பனிகளின் பிரதான ஏஜன்டுகளாக இருப்பதனுல் குறைந்த செலவுடன் விமான டிக்கட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்
- பிராக், பெல்ஜியம் விசா ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- குறைந்த கொமிஷனில் ரவலர்ஸ் செக் செய்து தரப்படும்.
- அதிகப்படியான மத்திய கிழக்கு டிக்கட்டுகளில் 13½% கழிவு தரப்படும்.



# பவர்ஸ் உரம்
ஒப்பற்றது

ABC

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி: 20551-6

MASTERS ABC 4/82 (A)

# நம்பிக்கைப் பேரொளியே!

(செல்வி சிவபாக்கியம்)

மெய்யுரைக் கீஸ்வரியே! தமிழ்மூன்றினின், வித்தகியே!
பொய்யுல காதி படைக்கின்ற. வேதன் புகழ்த்துணைவீ
கொய்மலர் மாலை என் நாவினின் சொற்களின் கோவை
[தந்தேன்
பெய்குவை, நின்னருள், மாரியென், நம்பிக்கைப்
[பேரொளியே!

மன்று புகுந்தெங்க ளப்பனைத் தூற்று மடமதியர்
துன்றி இழிதகைச் சொற்கள் பொழியத் துடித்துமுன்னாள்
கன்றியவ் வீனர்கள் நாவையடைத்த கல்யாணி! யென்றும்
வென்றி தருமின்ப வீணைக்கையா ளென்தனுள் விளக்கே!

கவியர சர்மீது கொண்டபொறுமைக் கனற்பிழம்பு
குவியுள நெஞ்சப் புலவர்கள் தீட்டிய குத்திரத்தைப்
புவியர சன்சேரன் உண்மை புலன்கொள்ளப் பொன்னி
[யற்குத்
தவியருள் கூர்ந்துன் சிலம்பொன் றளித்தனை சாரதையே!

# இரு பெரியார்

பல ஆண்டுகளுக்கு முன் நான் இங்கிலாந்தில்படிப்பதற்காக கொழும்பிலிருந்து கப்பலின் மூலம் புறப்பட்டேன். அந்தக் காலத்தில் விமானப் பிரயாணம் கிடையாது. மூன்று நாளில் பம்பாய் துறைமுகத்தை அடைந்தோம். அங்கு ஆங்கிலேய பிரயாணிகளும், இந்தியபிரயாணிகளும் எங்களுடன் கப்பலில் சேர்ந்தார்கள். பம்பாயிலிருந்துபுறப்பட்டு சிலமணி நேரத்தில் இந்திய பிரயாணிகளுடன் சிநேகமாகிவிட்டோம். இவர்களில் ஒருவர் பெரிய மனிதன்போலவிருந்தார். நான் அவருடன் உரையாட ஆரம்பித்தேன். அவர்தான் ஒருஐ சி.எஸ். உத்தியோகஸ்தர் என்றும் அப்பொழுது இந்திய மத்திய மாகாணத்தில் நிதி ஆலோசகராக கடமையாற்றுவதாயும் கூறினார். இவர்தான் சிந்தாமன்-தேஷ்முக். பிற்காலத்தில் நேரு அரசாங்கத்தில் சிறப்பாக நிதிமந்திரியாக கடமையாற்றியவர்.

இவர் பம்பாய் பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருதம்படித்து பீ. ஏ பட்டத்தில் முதல் பிரிவில் சித்தியடைந்தவர். இதன்பின் கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகத்தில் தாவரவியல் கற்று இதிலும் முதற்பிரிவில் சித்தி அடைந்தார். பிறகு ஐ. சி. எஸ். சோதனையில் சித்தியடைந்து இந்தியா திரும்பினார். இவர் மனைவி ஒரு தெலுங்கு மாது துர்க்காபாய் தேஷ்முக்.

தேஷ்முக்கிடம் பழகத் தொடங்க பல தடவை அவருடன் உரையாட வாய்ப்புக் கிடைத்தது. தான் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது கணிதமேதை ராமானுஜமும் படித்தார் என்று கூறினார். ராமானுஜத்தைப்பற்றி பல விஷங்கள்கூறினார். ராமானுஜத்திற்கு தமிழன் என்று பெருமை, சோழ காலத்தில் கங்கை வரையும் படையெடுத்து வென்றோம் என்று கூறுவாராம். அதற்கு தேஷ்முக் தனது இனமாகிய மகாராஷ்டினரைப்பற்றிபெருமைப்பட்டு சிவாஜி எப்படி தெற்கு வரைக்கும் எல்லோரையும் போரில் வென்றார் என்று வாதாடுவார். இதற்கு ராமானுஜம் வேடிக்கையாக கூறுவாராம். ''மகாராஷ்டிரர் தமிழருக்கு ஒரு படி கூட வென்று ஏற்றுக்கொள்கிறேன். ''வாழைப்பழம்'' என்று கூறிவிட்டால்! தேஷ்முக் தோல்வியடைந்தார். இது சொல்லி முடிய என்னை வாழைப்பழம் என்று சொல்லும்படி கேட்டார். நான் சரியாக உச்சரித்தேன். இதற்கு தேஷ்முக் மன ஆறுதலாய் ''ஏதோ இந்த மனித வாயிலிருந்து தானே இந்த சத்தம் வருகிறது'' என்றார்.

கணிதமேதை ராமானுஜம் கும்பகோணத்தில் படித்தார். ஏதோ பணக் கஷ்டத்தால் மேல் வகுப்பு படிக்காமல் கலெக்டரின் இலாகாவில் ஒரு லிகிதராக கடமையாற்றினார். கலெக்டர் ஒரு ஆங்கிலேயர் -ஐ, சி. எஸ். உத்தியோகத்தர்-கேம்பிறிட்ஜ்பல்கலைக்கழக கணிதபட்டதாரி ராமானுஜம் அனுப்பும் கடதாசிகளில் அநேகமாக ஒரு கரையில் கணிதம் யாரோசெய்து பழகின மாதிரி காணப்பட்டது. ஒரு தரம் இதைஉற்றுநோக்கினார்-உயர்தரகணிதம அப்பொழுது ராமனுஜத்தை கூப்பிட்டு இது உம்முடைய வேலையா என்று கேட்டார். ஆம்என்றுகூற அவருடன் உரையாடியதும் ஆங்கிலேயர் திகைத்துப்போனார், ஏனென்றால் தன் பாட்டிலே ராமனுஜம் உயரிய கணிதம் கற்றுக்கொண்டிருக்கிறாரென்று ராமனுஜத்தை பேராசிரியர் ஹார்டியின் நூலைப் பார்த்தீரா என்று வினவ ஆம் என்று கூறினார். ஒரு அத்தியாயத்தில் ஒருபகுதியை முடியாமல் இதற்குமேல் இவ்விடயம் ஆராய்ச்சிக்கு உரியதென்று கூறியிருக்கிறார் ஹார்டி இதை வாசித்தீரா என்று கலெகடர் வினவ, ஆம் பார்த்தேன். ஆனால் இதிலொரு கஷ்டமுமில்லையே என்றும், நானே மிகுதியை நிரப்பினேன் என்றார் ராமானுஜம். ஆச்சரியப்பட்ட கலெக்டர் இவருடைய குறிப்பை ஹார்டிக்கு அனுப்பினார்.

(அக்காலத்து ஆங்கிலேயரின் பண்புக்கு பெருமை கொடுக்கும் சம்பவம் இது. ஏனென்றால் உலகத்திற்கு ராமனுஜத்தை அந்நேரத்தில் தெரியாது. ஆங்கிலேயர் தன்னுடைய குறிப்பென்றால் உலகமே ஒத்துக்கொண்டிருக்கும் ஆனால் இவர் அப்படி செய்யவில்லை.) ஹார்டி ராமனுஜத்தின் விவேகத்தை மெச்சி அவருக்கு கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழக புலமைப் பரிசிலொன்று பெற்றுக்கொடுத்தார். அங்கே சில ஆண்டுகள் படித்தார். சைவசாப்பாட்டிற்கு அக்காலத்தில் வசதிகுறைவாயிருந்ததால் நோய்வாய்ப்பட்டு தன்படிப்பைப் பூரணமாக முடிக்கும் முன் தாயகம் திரும்பினார். ஒரு ஆசிரியருக்கு பல மாணவர் உண்டு. ஆனால் ராமானுஜத்திற்கு இரண்டு பேராசிரியர்கள் கல்வி புகட்டினார்கள். அப்படியிருந்தும் போதாது, போதாது வென்று கூறுவாராம் ராமானுஜம். கேம்பிறிட்ஜ் கல்லூரியில் ஆகக் குறைந்தத மூன்றுவதாண்டின் தொடககத்தில் தான் ⱶellow (வெலோ) என்ற நியமனம் கொடுப்பார்கள். ராமானுஜத்திற்கோ இராண்டாம் ஆண்டிலேயே ரினிரி கல்லூரி இப்பட்டத்தை அளித்தது. ஒருமுறை சுகவீனமாக ஆஸ்பத்தரியில் ராமானுஜம் தங்கியிருக்கும் பொழுது பேராசிரியர்கள் ஹார்டி, லிர்ரில்வூட் சென்றார்களாம். மேல் வீட்டிலிருந்து ராமானுஜம் இவர்கள் வந்த மோட்டார் வண்டியின் இலக்கத்தை கவனித்து அவர்கள் வந்ததும் இவ்வெண்ணைப் பற்றி ஒரு விரிவுரையே கொடுத்தாராம்.

ஒரு பொழுது ஹார்டி இராமானுஜத்தைப் பற்றி கேம்பிறிட்ஜில் பேசும்பொழுது நான் கேட்டிருந்தேன். அவர் குறிப்பிட்டதாவது: ராமானுஜம் தானே கணிதத்தைப் படித்ததால் சில தவறான கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டார். ஆகையால் தான் படிப்பிக்கும் பொழுது ஒரு பகுதி

(5-ம் பக்கம் பார்க்க)

நா. மணிக்க இடைக்காடர்

# நவராத்திரி இருக்க நமக்கென்ன குறை

கற்பகதருவின் நிழலில் இருந்த ஒருவன் புலியையும் மரணத்தையும் நினைந்து அழிவைத் தன்னிடம் அழைத்துக் கொண்டதுபோல் உலக மாதாவாகிய தேவியையும் அருளையும் எண்ணி நாடாது சீரழிந்த வாழ்வில் வருந்தி அவலம் உறுகின்றனர்.

கம்பரும் காளிதாஸரும் அம்பாளின் அருள்பெற்று அறிஞர்களாகவும் புலவர்களாகவும் விளங்கியவர்கள். இவர்களது அறிவும் புலமையும் இவர்களுக்கு மட்டுமன்றி, இவர்கள் காலந் தொடக்கம் இன்றுவரை மக்களுக்கு அறிவையும் மகிழ்ச்சிறையம் கொடுத்துவருவதைக் காணலாம்.

வடநாட்டை ஆண்ட முஸ்லிம் மன்னரின் அவையில் தன் அறிவையும் ஆற்றலையும் புலப்படுத்தி அங்கு சேவை பலசெய்வதற்காகத் தனக்குத் தெரியாததும் அம்மன்னனுக்குத் தெரிந்ததுமாகிய வங்காள பாஷையின் அறிவை அம்பா (சரஸ்வதி) ளின் அருளால் பெற்றவர் குமரகுருபரர்.

பரந்தெழுந்த சமண சமயத்தின் தாக்கத்தால் ஏற்படும் கெடுதல்களை நீக்கவும் நாமெல்லாம் சைவத்தில் நிலைக்கவும் பெரியநாயகியின் ஞானப்பால் அருந்தியவர் ஞானசம்பந்தப் பிள்ளையார்.

தன் வாக்கை மெய்ப்பித்து, அமாவாசை தினத்தைப் பூரணை என்று சொல்லியதை நிருபித்து அரச தண்டனையிலிருந்து தன்னைப் பாதுகாக்க அம்பிகையின் அருளைப் பெற்றவர் அபிராமிபட்டர். இவ்வபிராமிபட்டரின் பாடல்கள் மூலம் பலர் அம்பிகை அருளால் இடர்கள் நீங்கி நலமடைந்துள்ளனர்.

விவேகானந்தரை உருவாக்கி உலகமுழுவதுக்கும் இந்து சமயப் பெருமையை உணர்த்திய இராமகிருஷ்ண பரமஹம்சரும் அம்பிகையின் அருள் பெற்றவரேயாவர்.

இந்திய சுதந்திரத்துக்குப் பாடுபட்டதுமட்டுமன்றி மக்களுக்கெல்லாம் சுதந்திர தாகத்தை ஏற்படுத்திய பாரதியாரும் சக்தியின் பூரண சகாயத்தைக் கொண்டே தன் சாதனைகளையெல்லாம் சாதித்திருக்கின்றார்.

இந்திரன் முதலிய தேவர்களெல்லோரும்கூடத் தமக்கு அசுர பயம் ஏற்பட்ட பல சந்தர்ப்பங்களில் அம்பிகையின் அருளை நாடியே நலமடைந்திருக்கின்றனர். சாமுண்டி, காளி, மல்லாத் யாசுரமூக தைத்ய சமனி, மகிஷாசுர்மர்த்தனி முதலிய பல பெயர்கள் அம்பிகை தீய குணங்களின் இருப்பிடமான அசுரர்களை அழித்துத் தேவர்களை வாழ்வித்ததினாலேயே ஏற்பட்டது.

உலக மாதாவாகிய அம்பிகையின் நாமங்கள் பல அவள் அடியார்களுக்கு அருள் செய்ததன் காரணமாக ஏற்பட்டனவே என்பதை அறிந்து நலமடைதல் அறிவுடைமையின் தன்மையாக இருக்கவேண்டும்.

உலகத்துக்குக் கருத்தாவாகிய சிவபெருமானது அருட்குணமே அம்பிகையாக உள்ளதென்றும், அம்பிகையை வணங்குவது சிவ வழிபாடாகவே முடியும் என்பதும் பல பெரியார்களது முடிபாகும்.

கேதீஸ்வரம், கோணேஸ்வரம், மதுரை சிதப்பரம், காசி முதலிய பெருமைமிக்க சிவத்தலங்களிலெல்லாம் கௌரி-மாதுமை, மீனாட்சி, சிவகாமி, விசாலாட்சி முதலிய திருநாமங்களுடன் எழுந்தருளியிருக்கும் அம்பிகை தன்னை வணங்கும் அடியார்கள் எங்கிருந்தாலும், எவ்வுருவில் வழிபட்டாலும் அருள் புரியும் கருணைமயமான சிறப்புடையவள்.

தன்னுடைய சிறுமைகளையும் பாபங்களைபும் உணர்ந்தவர்களாய், அம்பிகையின் கருணையினையும் தாய்மையினையுப் நினைந்து வழிபடும் அடியார்கட்கு விரைந்தருளும் அம்பிகையை வழிபட எல்லாக் காலங்களும் உரியனவேயானாலும் நவராத்திரி, பூரணை முதலிய காலங்கள தனிச் சிறப்பு உடையனவாம். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்பதுபோல அம்பாளுக்குரிய புண்ணிய காலத்தில் அம்பாளை மன மொழி மெய்களால் வழிபட்டால் எல்லா நலன்களையும் பெற்று மகிழலாம். சோம்பியிருந்து கொண்டு வறுமைத் துன்பத்தால் வாடுபவர்களைக் கண்டு பூமித்தாய் பரிகசிப்பாள் என்பது திருவள்ளுவர்கண்ட உண்மையாகும். அகிலலோக நாயகியாகிய அம்பாள் பெருங் கருணையுடன் இருக்கையிலே அவளை வணங்கி அருள்பெற உகந்த நவராத்திரி காலம் இருக்கையிலே அகதிகளாகவும், நீதியான ஆட்சியற்றவர்களாகவும், நெறியல்லா நெறியிற் செல்பவர்களாகவும் இருப்பதற்கு அவசியமே இல்லை.

தி. பொன்னம்பலவாணர்

## விஜயதசமி விழா

(சாவகச்சேரி)

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தில் விஜயதசமி விழா எளிமையான முறையில் நிலையத்தலைவர் சி. சின்னையா தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

SCIENCE ACADEMY 310, Clock Tower Road, |Jaffna.

A/L 84 DAY CLASSES — ஆரம்பம் 17-10-83

தூய, பிரயோக கணிதம் — வெக்டர் வேலாயுதம்.

வெக்டரின் DAY CLASSES ஆரம்பமாகியுள்ளன.

காலை 7-00 தொடக்கம் 11-00 வரை

### மயிலிட்டி கொள்ளை வழக்கு

# 3 சந்தேகநபர் றிமாண்டில் நகைகள் மீட்கப்பட்டன!

(மாவிட்டபுரம்)

மயிலிட்டிகொள்ளை சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள் கைதாகி அவர்கள் மூலமாக கொள்ளை போன நகைகள் மீட்கப்பட்டுள்ளன. மூன்று நபர்களும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுஇம்மாதம் 24ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

மயிலிட்டியைச் சேர்ந்த திருமதி பூபாலசிங்கம் என்பவரது வீட்டில் கடந்த 4மாதங்களின் முன்இடம் பெற்ற ஒருலட்சத்து 30 ஆயிரம் ரூபா கொள்ளைச்சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவுபொறுப்பதிகாரி திரு. ஆர். எஸ். ஜெயபாலன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி விசாரணை மேற்கொண்டு பொதுமக்களது உதவியுடன் மூன்று சந்தேக நபர்களை கைதுசெய்ததுடன் அவர்கள் மூலமாக மயிலிட்டி யாழ்ப்பாணம் உடுப்பிட்டி ஆகிய இடங்களிலிருந்து கொள்ளை நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

மயிலிட்டியைச் சேர்ந்ததம்பிசேகர், செல்வராஜா, விஜயராஜா, சின்னத்துரை, அரியரட்ணம் ஆகிய மூன்று சந்தேகநபர்களையும் காங்கேசன் துறைப் பொலிஸ் சார்ஜண்ட் திரு வி. தியாகராஜா மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்தார். நீதிபதி திரு. சீ. வி. விக்கினேஸ்வரன் மூவரையும் இம்மாதம் 24ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

மேற்படி கொள்ளைச்சம்பவம் தொடர்பாக மேலும் ஒருபகுதி நகைகளை கைப்பற்ற வேண்டியிருப்பதால் காங்கேசன்துறை பொலிசார் அது தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ளனர். (க)

## கடையிற்சுவாமியார் வில்லுப்பாட்டு

(யாழ்ப்பாணம்)

விஜயதசமி உற்சவத்தை முன்னிட்டு நீராவியடி கடையிற்சுவாமி சமாதிகோயிலில் இன்று பட்டினத்தடிகளும் கடையிற்சுவாமியும் என்ற பொருளில் மகாதேவன் வில்லிசைக்குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி இடம்பெறும். அத்துடன் கம்பரும் கலைவாணியும் என்றபொருளில் திருப்பூங்குடி ஆறுமுகம் விசேட சொற்பொழிவாற்றுவார்.

காலையில் அபிஷேக ஆராதனைகளுடன் பஜனை பூசைவழிபாடுகள் என்பனவும் இடம் பெறும். (கு).

# மாதகலில்திருடியபொருட்கள் பொலிசாரால் மீட்பு!

(மாவிட்டபுரம்)

மாதகலில் களவாடியபொருட்களைசாவகச்சேரிக்குகொண்டு சென்று விற்ற நபர் ஒருவர் மீண்டும் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட சமயம் பொதுமக்களால் பிடிக்ப்பட்டார். சாவகச்சேரியில் அவரால் விற்கப்பட்ட திருட்டு பொருட்களும் மீட்கப்பட்டன.

மாதகலைச்சேர்ந்த ஆர். கந்தசாமி என்பவரது கடையை உடைத்து 3000ரூபா பெறுமதியான சீனி, ஹோலிக்ஸ், லக்ஸ்பிறே, மின்பற்றறிகள் ஆகியனவற்றை திருடிய இவர் அவற்றை சாவகச்சேரிக்கு கொண்டுசென்று விற்ருராம்.

திருட்டில் ருசிகண்ட இப்பேர்வழி மீண்டும் இதேகடையில் திருடமுயன்ற சமயம் பொதுமக்களால்பிடிக்கப்பட்டு 'டிராக்டரில்' ஏற்றப்பட்டு ஊர்வலமாக கொண்டுவரப்பட்டு காங்கேசன் துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டார்

இவர் மூலமாக காங்கேசன் துறைப் பொலிசார் மேற்கொண்ட விசாரணையின் பயனாக சாவகச்சேரியில் இந்நபர் விற்பனை செய்த பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் மேற்படி நபரது சகாவெனச்சந்தேகிக்கும் நபர் இருவரையும் பொலிசார்கைது செய்துள்ளனர்.

க. சந்திரன், எஸ். கணேசலிங்கம் என்னும் இரு சந்தேக நபர்களும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (க)

## யாருடையது?

கண்பார்வை குறைந்தவர் பாவிக்கும் வெள்ளைப் பிரம்பு ஒன்றினை ஆரிய குளம் சந்தியில் கண்டு எடுத்து ஓர் அன்பர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## இரு பெரியார்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரம் தவறுன கருத்துக்களை திருத்துவதிலும், புதிதான சரியான கருத்துக்களில் மிகுதி நேரத்தையும் செலவழித்தார். இதை நாமெல்லோரும் கவனிக்கவேண்டும். இதற்கு உதாரணமாக ஒருவர் எம். ஏ. பட்டம் வரைக்கும் தானேபடித்து பட்டம் பெற்ற பிறகு அக்காலத்து இலங்கை பல்கலைக்கழக கல்லூரி அதிபரிடம் தனக்கு வாரத்திற்கு இரண்டு விரிவுரை கொடுக்க முடியுமோ என்று கேட்டார். தன்னுடைய கெட்டித்தனம் ஆசான் இல்லாமல் எல்லாம் கற்றதுதான்என்ருர். அதற்கு அதிபர் இந்த காரணத்திற்குத்தான் விரிவுரை கொடுக்க அஞ்சுகிறேன் என்ருர்.

தேஷ்முகும், ராமனுஜமும் கேம்பிறிட்ஜ், பல்கலைக்கழகத்தில் முதலாம் மகா யுத்த காலதத்தல் கல்வி கற்ருர்கள். ஒரு பொழுது ஜெர்மன் செப்பலின் மூலம் இவர்களிருந்த பட்டணத்தைத் தாக்கிஞர்கள். இருவரும் ஓடி மறைந்தார்கள். வெளியே வந்ததும ராமானுஜம் இது தனக்கு தகுந்த தண்டனையென்ருர் ஏனென்று வினவியதும் அன்று உண வருந்திய பிறகு அறிந்தாராம் உணவில் முட்டை கலந்ததென்று தான் சைவ சாப்பாட்டுக்காரன் ஆனபடியால் முட்டை சாப்பிட்டதும் தண்டனைகுத் தான் ஜெர்மன் செப்பலினை அனுப்பினதாக எண்ணிஞராம்.

இப்பெரியார்களின் வாழ்வில் நாம் அறியக்கூடியது யாது? தேஷ்முக் பலதுறையில் ஒருவர் வல்லுனராக இருக்கலாமென்பதற்கு எடுத்துக் காட்டு. சமஸ்கிருதம், தாவரவியல், நிதி போன்ற துறைகளில் உன்னத நிலையை யடைந்தார். மேல் நாட்டு நாகரீகத்தின் நல்ல அம்சங்களை பாரத பண்போடு சேர்த்து ஒரு நல்வாழ்வு வாழ்ந்தார். மற்றைய இனத்தின் நற்குணங்களை மெச்சிஞர் ராமானுஜப பிரயாசையாலும், ஊக்கத்தாலும் ஒரு துறையில் சரியான சூழ்நிலை இல்லாமலும் முன்னேறலாமென்று எங்களுக்கு எடுத்துக்காட்டுகிருர். இவ்வுலகத்தில் கணிதம் இருக்கும் வரையும் அவர் பெயர் மறையாது இப்பெரியார்களின் வாழ்வு எங்களுக்கு இரு கலங்கரை விளக்காகப்பிரகாசிக்கட்டும்.

# துப்பாக்கி முனையில் கார் கடத்தப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

இயக்கத்தின் வளர்ச்சிக்கு உபயோகப்படுத்துவதற்கென்று கூறி இனம்தெரியாத ஐந்துவாலிபர்கள் துப்பாக்கி முனையில் கார் ஒன்றை வீட்டிலிருந்து கடத்திச் சென்றுள்ளதாக யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ். கோவில் வீதியில் உள்ள பொன்னம்பலம் தர்மபாலன் என்பவருக்குச் சொந்தமான 'வாக்ஸ்வொகன்' 8 ஸ்ரீ 4977 காரே கடத்திச் செல்லப்பட்டதாகும்.

நேற்று முன்தினம் இரவு 11-15 மணியளவில் குறிப்பிட்ட வாலிபர்கள் இலக்கத்தகடு பொறிக்கப்படாத வானென்றில் வந்தே தமது காரைக்கடத்திச்சென்றதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது,





வடமராட்சியில் இன்று மகத்தான

திறப்பு விழா

கல்யாணி ஸ்டோர்ஸ்

(வீரவாகு கட்டிடம்)

165/21, பிரதான வீதி, பருத்தித்துறை.

இன்று ஞாயிற்றுக்கிழமை

காலை 9 மணிக்கு வரும் சுபவேளையில்

திரு. பொன்னுச்சாமி வீரவாகு (J.P) அவர்களால்

திறந்து வைக்கப்படும்.

இவ்வைபவத்திற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு, வர்த்தகப் பிரமுகர்கள், வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

உங்களுக்குத் தேவையான மளிகைச் சாமான்கள், ஒயின்மென்ட் பொருட்கள், பலசரக்கு வகைகள், தேங்காய் எண்ணெய் முதலியன, மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

L. P. காஸ் சிலிண்டர்களும் பெற்றுக்கொள்ளலாம்.

பருத்தித்துறை — கொழும்பு லொறி டிரான்ஸ்போர்ட்டும் மேற்கொள்ளப்படும்.

கல்யாணி ஸ்டோர்ஸ்,

165/21, பிரதான வீதி, பருத்தித்துறை.

★ பருத்தித்துறை—கொழும்பு வாசன்ஸ் ட்ரவல்ஸ் இரவு பஸ் சேவை வெகு விரைவில் ஆரம்பிக்கப்படும்.

9344



கண்கவர் மரத்தளபாடங்கள், பிரம்புத்தளபாடங்கள் ஸ்ரீல் தளபாடங்கள் (ஆர்பிக்கோ) முதலியவற்றிக்கு யாழ் நகரில் பிரபல்யம்மிக்க ஸ்தாபனம்!



★ LONG LIFE
★ BEAUTIFUL DESIGNS
★ VARIETY OF CHOICE
FREE DELIVERY WITHIN 3 MILES RADIUS




டில்கா பேணிச்சர் பலஸ்

DILKA FURNITURE PALACE 234,236, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.

போன்: 24186

செற்றிகள் ரூபா 4700/- முதல் = அலுமாரிகள் 3500/- முதல் - கபினற்றுகள் 950/- முதல்

# மட்டுநகர் சிறையில் தப்பியவர் உடுப்பிட்டியில் கைதானர்!

(யாழ்ப்பாணம்)
மட்டக்களப்புச் சிறையிலிருந்து தப்பிய கைதிகளில் ஒருவர் உடுப்பிட்டியில் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த சிறுமியின் காதணிகளை அறுத்துக் கொண்டோடியபோது பொதுமக்கள் மடக்கிப் பிடித்துப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த சோதிலிங்கம் சிவம் (20 வயது) என்பவரே பிடிபட்டவராவார்.

இவர் மட்டக்களப்புச்சிறைச்சாலையில் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுச் சிறைவைக்கப்பட்டிருந்தவர்.

கடந்த செப்டம்பர் 23ம் திகதி இரவு மட்டக்களப்புச் சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடித் தலைமறைவாக நடமாடி வந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

உடுப்பிட்டியைச் சேர்ந்த சமரபாகு என்ற இடத்தில் வைத்தே பொதுமக்களால் சுற்றிவளைத்துப் பிடிக்கப்பட்டு வல்வெட்டித்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டாராம்.

பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர். [மா]

## சனசமூக நிலைய நியாயவிலைக் கடை

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலயத்தின் நியாயவிலை மரக்கறி விற்பனை நிலையத்தை இன்று 16ம் திகதி காலை பருத்தித்துறை உதவி அரசாங்கஅதிபர் திரு. வை.வேலும்மயிலும் ஆரம்பித்துவைக்கவுள்ளார். (வெ)

# யாழ். லயன்ஸ் கழகத்தின் ஆங்கில வகுப்புகள்

[யாழ்ப்பாணம்]
யாழ். மாவட்ட இளைஞர்களின் ஆங்கில அறிவை விருத்திசெய்யும் முகமாக யாழ். லயன்ஸ் கழகம் துரித ஆங்கில வகுப்புகளை நடத்தவுள்ளது.

இவற்றிலொன்று 6 மாதத்திற்கான துரித வகுப்பாகவும், மற்றையது ஒரு வருடத்திற்கான வகுப்பாகவும் நடைபெறவுள்ளது.

இவ்வகுப்புகளுக்கான பதிவுகள் இம்மாதம் 19ம் திகதி இடம்பெறவுள்ளதாகவும், இது தொடர்பான விபரங்களுக்கு யாழ். லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் ரி. அற்புதானந்தனுடன் யாழ். பிரதான வீதியிலுள்ள கொமர்ஷல் பிறின்ரேஸில் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். தொலைபேசி இலக்கம்: 22615. (வெ)

இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு

# விரும்பிய' மாவட்டத்தில் இடமாற்றம் கிடைக்கும்

## த. ஆ. ச. செயலாளர் நம்பிக்கை

[யாழ்ப்பாணம்]
இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த சகல ஆசிரியர்களுக்கும் அவர்கள் விரும்பும் மாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்க கல்வி அமைச்சு சம்மதிக்குமெனத் தாம் இன்னும் உறுதியாக நம்புவதாகத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் எதிர்காலம் குறித்துக் கருத்துத்தெரிவிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:-

''பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சகலரும் அக்டோபர் மாதம் 13ம் திகதிக்குப் பின்னர் முன்பு கடமையாற்றிய பாடசாலைகளுக்கே செல்ல வேண்டுமெனக் கல்வியமைச்சு மேற்கொண்ட முடிவு இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல தமிழர் ஆசிரியர் சங்கத்திற்குமே பேரதிர்ச்சியைக் கொடுத்தது.

இம்முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் உடனடியாகக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. எல். விஜயமானேயுடன் தொடர்புகொண்டு ஆசிரியர்களின் இன்றைய நிலைகுறித்து நீண்ட நேரமாக விளக்கிக் கூறினேன்.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் தனித் தனியான மேன் முறையீட்டுக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டு தம்மைச் சந்திக்கும்படி அவர் என்னிடம் கூறினர். இதற்கமையப் பாதிக்கப்பட்ட சகல ஆசிரியர்களினதும் தனித்தனியான மேன்முறையீட்டுக் கடிதங்களுடன் அவரைச் சந்திக்கவிருக்கிறேன்.

தேவையேற்படின் இவர்களின் பிரச்னை குறித்துக் கல்வி அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவேன்.

### வேண்டுகோள்

பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் மேன்முறையீட்டுக் கடிதங்களைக் கல்வியமைச்சு பரிசீலித்து முடிவெடுக்கும்வரை அந்த லீவுக்கான காரணமாக பாதுகாப்பு இன்மை, இருப்பிட வசதியின்மை, போக்குவரத்து வசதியின்மை ஆகியவற்றைக் குறிப்பிடும்படியும் திரு. மகாசிவம் சகல பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கும் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

## இன்று

[யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாணம் அத்தியடி விநாயகர் ஆலய மானம்பூ உற்சவம் இன்று மாலை 5-30 மணிக்கு சிறப்பாக நடைபெறவுள்ளது. [வெ]

## கல்வயல் கொலை, கொள்ளை வழக்கு:

# "தெருப்படலையில் பலர் திரண்டு நின்றார்கள்"

(யாழ்ப்பாணம்)
பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் பாக்குவெட்டி பற்றித்தான் கூறவில்லை மறந்து போய்கூறாமல் விட்டுவிட்டேன் என்று கல்வயல் கொலைவழக்கில் சாட்சியமளித்த மு. வேலுப்பிள்ளை குறுக்குவிசாரணையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எ. ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

இவ்வழக்கில், கல்வயலில் 78 ஜூன் மாதம் 23-ம்தேதி கி. சிதம்பரப்பிள்ளையைக் கொலைசெய்ததாகவும், அதே நேரத்தில் இராசம்மாவிடம் 450 ரூபா கொள்ளையடித்ததாகவும், அதேநேரத்தில், இராசம்மாவிடம் 3200 ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்ததாகவும் கொலைக்கும் கொள்ளைக்கும் சதிசெய்ததாகவும், சின்னத்துரை தங்கேஸ்வரன், குமாரசிங்கம் சிவபாதம், தம்பு கந்தசாமி, சரவணை மாணிக்கசிவம், சுப்பிரமணியம் சிவபாலன், சுந்தரலிங்கம் நகுலேஸ்வரன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம், 2-ம், 3-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். சிறிசிவாயாவும், 4-ம், 5-ம், 6-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும், சட்டத்தரணி, திருமதி நி. அம்பிகைபாலனின் அனுசரணையுடன் ஆஜரானார்கள்.

(7ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அதிகாரிக்கு கத்திக்குத்து

(கரவெட்டி)
நெல்லியடிச் சந்திக்கருகில் உள்ள ஓட்டு விற்பனை நிலையமொன்றில் நள்ளிரவில் சந்தேகத்திற்கிடமான நிலையில் காணப்பட்ட மூன்று நபர்களை விசாரிக்க முயன்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவரில் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டுக் காயமுற்றார். சந்தேக நபர்களைத் துரத்திச்சென்ற ஒருவரும் தாக்குதலுக்குள்ளாகிக் காயமுற்றுள்ளார்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பருத்தித்துறைப் பொலிஸில் புகார் செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக ராஜ கிராமத்தைச் சேர்ந்த இரு வாலிபர்கள் மீது பொலிஸில் புகார் பதிவுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.


'கனன்' போட்டோப் பிரதி இயந்திரம்

'மொடல்' N P 120 விசேட விலை ரூபா 59,900/-

விலையேற்றத்துக்கு முன்உங்கள் தேவையைப் பூர்த்தி செய்யுங்கள்!
ஒரு போட்டோப் பிரதி எடுப்பதற்கு செலவாகும் தொகை — -/14 சதமே!
ஆறு அல்லது பன்னிரண்டு மாத தவணை முறைகளிலும் பணத்தை திருப்பிச் செலுத்தும் வசதிகள் செய்து கொடுக்கப்படும்!
முழு விபரங்களுக்கும் எம்மோடு உடன் தொடர்பு கொள்ளவும்.

★ 'ஒப்ரீமா', 'சில்வர் ரீட்' ஆங்கில தட்டெழுத்து இயந்திரங்கள்
★ 'ஹல்டா' தமிழ் தட்டெழுத்து இயந்திரங்கள்
★ 'கனன்' எலக்ரோனிக் கல்குலேற்றர்கள்

ரூபா 2000/- முதல் 8000/- வரை
முதலியனவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்.
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22134



● நம்பிக்கை ● நாணயம் ● நன்மதிப்பு

SHABRA

Unico Finance Limited

உங்கள் முதலீட்டிற்கு பாதுகாப்பையும் நம்பிக்கையையும் உயர்ந்த வருமானத்தையும் தருவது! SHABRA! கவர்ச்சிகரமான வட்டிவிகிதங்களில் நிலையான வைப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

61, நியூ புலர்ஸ் வீதி, கொழும்பு - 4.
தொ. பேசி: 589310.
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பேசி: 22073.



ஹோம் பினன்ஸ் லிமிட்.

தினசரி காலை மாலை லக்சறி பஸ் சேவிஸ்
அத்துடன் புத்தம் புதிய மினிபஸ் சேவிஸ்

டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பினன்ஸ் லிமிட். 82, கன்னதிட்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24310
2. யாழ். மெற்றல் சேல்ஸ் சென்ரர் 6, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 23596
3. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம் 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22537, 22370

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 3-20, 6-15
பாக்கியராஜ் - சரிதா
மௌன கீதங்கள்

**லதா** (கொண்டாவில்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
பெற்றால்தான் பிள்ளையா?

**சாந்தி** யாழ்நகர்
10.30, 2.15, 4.45, 7.00
"Take This Job And Shove It"
action - comedy - color

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி
10-30, 3-15, 6-30,
விடியும்வரை காத்திரு

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10 30, 2.15, 4.45, 7.00
A one man Army
Clint Eastwood in
OUT LAW JOSEY WALES
(Action)
(Color Scope)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 6-45
Today Onley
Bruce Lee in
ENTER THE DRAGON
Limited Engagement
For the last time in Jaffna
புரூஸ் லீ நடித்த
என்டர் த ட்ரகன்
சில தினங்கள் மட்டும்
யாழ் நகரில் கடைசி
தடவையாகத் திரையிடப்படுகிறது.
17-th and 18-th
NEIGHBOURS

"DOGS OF WAR"
திரைப்படத்தை திருப்பி அனுப்பும்படி திரைப்பட கூட்டுத்தாபனத்தால் கோரப்பட்டுள்ளது. அத்துடன் யாழ். நகரில் இது இனி திரும்பவும் திரையிடப்படமாட்டாது. ஆகவே படத்தைத் தவறவிட்டு வருத்தப்படாது காட்சிக்குமுந்திவிடுங்கள்.

**றீகல்** (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30, 4-45, 7-00 p.m.
Christopher Walken in
Dogs of War
WAR FILM—COLOR

**ராணி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன் - அம்பிகா
சகலகலா வல்லவன்

சில தினங்கள் மட்டும்
**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரிதா
ராதா - ராஜீவ் துணை
(கலர்)

**ராஜா** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ் - அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
அந்த 7 நாட்கள்
[கலர்]

**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 5-00, 7-15
1976-ம் ஆண்டில் உலகத்தையே வியப்பில் வைத்த "என்றபே" விமான நிலையத்தில் நடந்த பயங்கரமான விமானக் கடத்தல் பற்றி நீங்கள் கேட்டும், வாசித்தும் இருப்பீர்கள். இந்த உண்மையான சம்பவத்தை இப்பொழுது வெள்ளித்திரையில் காணத் தவறாதீர்கள்.
"RAID ON ENTEBBE"
in
Operation Thunderbolt
The way it. Really happened.
The Tense Action - Packed Story of the Raid that startled the World.
Passess Concessions suspended.


## கீரிமலையில் கௌரிவிரத இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

கீரிமலை அருள்மிகு நகுலேஸ்வரர் ஆலயத்தில் ருத்திரா பிஷேகமும், ருத்திரா அர்ச்சனையும், கேதாரகௌரி விரத இலட்சார்ச்சனையும் இன்று காலை நடைபெறவுள்ளது. மாலை மாம்பூ உற்சவம் இடம் பெறும். இரவு கௌரி விரத இலட்சார்ச்சனை ஆரம்பமாகும்.

இக்கௌரிவிரத இலட்சார்ச்சனை எதிர்வரும் நவம்பர் மாதம் 4-ம் திகதி முடிவடையும். அன்று விசேடபூஜைகள், அர்ச்சனைகள், கௌரிநோன்பு நூல் வழங்குதல், சங்காபிஷேகம், திருவீதி உலா ஆகியன இடம்பெறவுள்ளன.

## புதுடில்லி ரயில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய செய்தித்துறை அமைச்சர் திரு. பகத், புதுடில்லி ஆளுநர் லெப்டினன் ஜெனரல் ஜெகன்மோகன் ஆகியோர் உட்பட இந்திய ரயில்வே உயரதிகாரிகள் புதுடில்லிரயில் நிலையம் சென்று நிலைமைகளை அவதானித்தனர். (கி)

## தெருப்படலையில்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசதரப்பில் அரசசட்டத்தரணி கே. வி. எஸ். ஸ்ரீகந்தகுமார் ஆஜரானார்.


வேலுப்பிள்ளை சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: சம்பவத்தின் பின் தெருப்படலையில் பலர் திரண்டு நின்றார்கள் எவரும் படலையைத் தாண்டி வளவிற்குள்வரவில்லை இராசம்மாவும் நானும் வீட்டு வளவிற்குள் நின்றோம். 8மணிவரை நின்றேன்.

விசாரணை நாளை காலை தொடர்ந்து நடைபெறும். (ச)


**பிரகாசன் (Perakasan)**
றேடியோ, ரெலிவிசன், மின் இணைப்பு வயறிங் (Wiring) வகுப்புகள்
ஆரம்பம்: 22 - 10 - 83
சனி, ஞாயிறு வகுப்புகள்
பிரிவு - 1 — காலை 7-00 மணி
பிரிவு - 2 — மாலை 5-30 மணி
"ஸ்கந்த வாசா",
தபால் நிலைய வீதி, சாவகச்சேரி. 9212

யாழ். மக்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
உங்கள் குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகள் ஆகியவற்றை உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் உங்கள் இல்லத்தில் அல்லது எங்கள் வேலை ஸ்தலத்திற்குக் கொண்டுசென்று கைதேர்ந்த வல்லுனர்களால் பழுது பார்ப்பதற்கும்,
குளிர்சாதனப்பெட்டி பழுது பார்ப்பதற்குத் தேவையான சிறந்த உதிரிப்பாகங்கள் வேண்டிய அளவு பெற்றுக்கொள்வதற்கும்
நீங்கள் நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்
லீலா என்ஜினியரிங் வேக்ஸ்,
இல. 147, கே. கே. எஸ். வீதி,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.
தொலைபேசி : மாவிட்டபுரம் 3
தலைமை அலுவலகம் :
இல. 400, கே. சிறில், சி. பெரேரா மாவத்தை,
கொழும்பு 13.
தொலைபேசி : 25933 (9192)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் வைத்திலிங்கம் விநாயகமூர்த்தி (வர்த்தகர்)

தோற்றம்: 19-2-1921 மறைவு: 16-9-1983

அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டு இறைவனடி சேர்ந்து இன்றுடன் 31-ம் நாள் ஆகின்றது. உங்கள் அன்பும் பண்பும் எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது நீடித்திருக்கும்.

உம் பிரிவால் வாடும், மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.
"சிவபதி", சரவணை கிழக்கு,
வேலணை. 9332


## பணிப்பெண் தேவை


ஆங்கில அறிவுள்ள முப்பத்தைந்து வயதிற்குட்பட்ட பணிப்பெண் தேவை. பிற்பகல் இரண்டு மணிக்கு முன் நேரில் சந்திக்கவும்.

சு. ஸ்ரீபாஸ்கரன் B.A.
7-ம் கட்டை ஒழுங்கை,
மல்லாகம். 9339

கலர் புகைப்படங்களை
குறைந்த செலவில்
குறுகிய காலத்தில்
PROCESSING AND PRINTING
செய்து நயமடைய நாடுங்கள்!
கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்.
(9172)


## ஓராண்டு நினைவஞ்சலி

அன்புத் தெய்வமே நீர் நிழல்தரும்
மரமென நினைத்துக் காத்திருந்தோம்.
நிழல்தேடி நீர்பறந்து இறைவனடி
சேர்ந்து ஓராண்டு காலமாகிவிட்டது.



ஐ. ராமு
(ஜேர்மனியில் காலமானவர்)

உதயம்: 1945–09–30

உறக்கம்: 1982–10–27

நீர் இல்லாத எம்வாழ்வு நீரற்றமரமாகியது
உயிருள்ள வரை உம் நினைவகளெல்லாம்
எம் உள்ளத்தில் ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கும்

உமது பிரிவால் துயர்வுறும் அன்பு மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள், மாமன், மாமி, மைத்துனர்கள், மைத்துனிகள், உறவினர்கள்.
கச்சாய் றோட், சாவகச்சேரி. 9285


Personal Classes for
G. C. E. (A/L) 1984
தூய பிரயோக கணிதம்
பகல் நேர வகுப்பு ஆரம்பம்: 19-10-83

| | | | |
|---|---|---|---|
| பிரிவு: I | 8-00: காவிகள்<br>9-00: திரிகோணகணிதம் | பிரிவு: II | 10-30: எறியம்<br>11-30: நுண்கணிதம் |

மணியம்ஸ் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(ஸ்ரீதர் சினிமா-நாகவிகாரை இடையில்)
ஆசிரியர்
RAVIMOHAN
(9336

# அகதிகள்புனர்வாழ்வு நிதி சேவைக்கு சர்வதேச மதிப்பு

## மேலும் உதவிகள் வழங்கவும் உறுதி

(யாழ்ப்பாணம்)

கலவரத்தில் அகதிகளாக தமிழ் பகுதிகளுக்கு வந்துள்ள மக்களின் நிவாரணத்துக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள 'அகதிகள் புணர்வாழ்வு நிதியம்' நிறுவனத்துக்கு சர்வதேச ரீதியில் மதிப்பும் பாராட்டும் கிடைத்து வருகின்றது. இவ் வியக்கத்துக்கு உதவிகள் வழங்கவும் சில ஸ்தாபனங்கள் முன் வந்துள்ளன.

அண்மையில் இலங்கை வந்து திரும்பிய 'ஏக்ஸ்ஃபாம்' நிறுவனத்தின் பிரமுகர் திரு. ஜெஃபால் டொர்ஸன், 'அகதிகள் புனர்வாழ்வு நிதியம்' அபாரமான பணியில் ஈடுபட்டிருப்பதாகப் பாராட்டியுள்ளார்.

இந்நிறுவனம் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளது என்றும் 'ஏக்ஸ்ஃபாம்' அதன் சேவையில் பூரண நம்பிக்கை வைக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். மேற்கொண்டும் 'ஒக்ஸ்ஃபாம்' இந் நிதி நிறுவனத்துக்கு உதவிகள் வழங்க ஆயத்தமாய் இருக்கின்றது என்பதையும் அவர் தமது கழகத்தில் அறிவித்துள்ளார்.

---

# வட்டு. யாழ். கல்லூரியில் துப்பாக்கிமுனையில்கொள்ளை!

## விஞ்ஞான கூடத்தை உடைத்து இளைஞரின் கைவரிசை!!

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியில் நேற்று முன்தினமிரவு விஞ்ஞான கூடத்தை உடைத்து இனம் தெரியாத ஏழு இளைஞர்கள் துப்பாக்கி முனையில், ரசாயன பொருட்களையும் ரேணியோ யந்திரமொன்றையும் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

நள்ளிரவு ஒருமணியளவில் சென்ற இக் கோஷ்டியினர், கல்லூரியிலுள்ள காவலாளி இருவரை துப்பாக்கியால் பயமுறுத்தி அவர்களை கட்டிப் போட்டுவிட்டு இக் கொள்ளையை நடத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

விஞ்ஞான கூடத்தை உடைத்து அங்குள்ள ரசாயன பொருட்களை எடுத்து சென்றுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை பொலிஸார் இச்சம்பவம் பற்றி [illegible]ணை செய்து வருகின்றனர்.

இதே இரவு அளவெட்டி பகுதியில் இளைஞர் கோஷ்டியொன்று 2 சைக்கிள்களை கடத்தி சென்றுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸார் இச் சம்பவம், தொடர்பாக விசாரணை செய்து வருகின்றனர். (க)

---

# கம்யூனிஸ்ட் கட்சி மீதான தடை நீக்கப்பட்டது!

(கொழும்பு)

அண்மைய கலவர காலத்தில் தடைசெய்யப்பட்டிருந்த மூன்று கட்சிகளில் ஒன்றான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மீதான தடையை அரசாங்கம் நேற்று நீக்கியுள்ளது. இதேவேளை மக்கள் விடுதலை முன்னணி, நவசமசமாஜிக் கட்சி ஆகியவை மீதான தடையுத்தரவு தொடர்ந்தும் அமுலில் உள்ளது. (சூ)

---

## சுண்டிக்குளியில் கைதாண

# பல்கலைக்கழக மாணவர் மூவரும் விடுதலை!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் சுவரொட்டிகள் ஒட்டிக்கொண்டிருந்த போது ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட மூன்று பல்கலைக்கழக மாணவர்களும் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

கந்தர்மடத்தைச் சேர்ந்த த. ஆதித்தன், கோப்பாயைச் சேர்ந்த எஸ். யோகராசா, நீர்வேலியைச்சேசர்ந்த எஸ் ஜெயரூபன் ஆகிய மூவருமே விடுதலை செய்யப்பட்ட மாணவர்களாவர். இம்மூவரும் பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடமாணவர்களாவர்.

இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் எழுதப்பட்ட சுவரொட்டிகளை சுண்டுக்குளி சந்தியில் ஒட்டிக் கொண்டிருந்தபோது அவ் வழியால் ரோந்து சுற்றிவந்த ஆயுதப்படையினர் இவர்களைக் கைது செய்தது தெரிந்ததே. (வெ-அ)

---

## விஜயதசமி விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நல்லலக்ஷ்மி அவெனியூ பகவான ஸ்ரீ சததியசாயி பாபா இல்லத்தில் இன்று மாலை விஜயதசமிவிழா கொண்டாடப்படுகிறது.

---

## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பண்டிதர் குகா தியாகராச பிள்ளை இயற்றிய 'சுந்தரர் பிள்ளைத் தமிழ்' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று மாலை ஊர்காவற்றுறை கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயத்தில் திரு. நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது.

காவலூர் இலக்கிய வட்டத்தினர் ஏற்பாடு செய்துள்ள இக்கூட்டத்தில் காரை சுந்தரம்பிள்ளை, க. சொக்கலிங்கம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். (சு)

---

## கடத்தல் காருடன் கைதான

# 3 இளைஞரும் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் கடத்தப்பட்ட காருடன் கைதான 3 இளைஞர்களும் விசாரணைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரிய வருகிறது.

அம்பிகாபதி கிறிஷ்டி ரஞ்சன், பாலசுப்பிரமணியம் இளங்கோ, சவரிமுத்து ஞானலிங்கம் ஆகிய மூவருமே சந்தேகத்தின பேரில் கைது செய்யப்பட்டவர்களாவர். (க)

---

## சென். ஜோன் அம்புலன்ஸ் கிளை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சென். ஜோன் அம்புலன்ஸ் சங்கத்தின் கிளை அங்குரார்ப் பணக் கூட்டம் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 18-ம் திகதி மாலை நடைபெறவிருக்கிறது. இக் கூட்டம் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெறும். (க)

---

## ராணுவத்துக்கும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளார். பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு வெளிநாடுகளிலிருந்து வழங்கப்பட்ட உணவு, உடை, மருந்துவகைகள் வேறுசாரா ருக்கும் வழங்கப்பட்டுள்ளன வென்று சில நாடுகள் சந்தேகப்படுகின்றன. ஆனல் இதில் எந்தவித உண்மையுமில்லை. இது இலங்கை பற்றி தவருன பிரசாரங்களை மேற்கொண்டு வரும் சில தீயசக்திகளின் செயலினுல் ஏற்பட்டதாகும்.

இலங்கை அரசாங்கம் இப் பொருட்களை சிறப்பான முறையில் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு வழங்கியுள்ளது. இவ்வாறுன சேவையை மேற்கொள்ளும்போது இத்தகைய பெயர் தவிர்க்க முடியாத தொன்ருகும்.

கலவரகாலங்களில் கொழும்பு முகாம்களில் தங்கியிருந்த 65000 பேரும் ஏனைய முகாம்களில் தங்கியிருந்த 15000 பேரும் இந்த உதவியை பெற்றனர். இன்று முகாம்களில்இருக்கும்23000 அகதிகளும் தமது சொந்த இடங்களுக்குச் சென்ற பாதிக்கபபட்ட ஏனையோரும் இவ்வுதவியைப் பெற்று வருகின்றனர் என்றும் வீரக்கோன் தெரிவித்தார். (சூ)

---

## அரசாங்க அதிபரிடம் புகார்

(யாழ்ப்பாணம்)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில 3200 குடும்பங்கள் அண்மைக் கலவரங்களினுல் பாதிக்கப்பட்டு வந்துள்ள போதிலும் அவர்களில 1000 குடும்பங்களுக்கு மாத்திரமே உடுபிடவைகள் வழங்கப்பட்டுளளதாகவும் ஏனையோர் இந்த உதவி பெறவில்லையென்றும் ஆதலால் அவர்களுக்கு இந்த உதவி வழங்குவதற்கு ஆவன செய்யுமபடி யாழ். அரசாங்க அதிபருக்கு புங்குடுதீவு பாதிக்கப்பட்ட வர்த்தக தொழிலாளர் நலன்புரி சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இப்பிரிவுக்கு பால்மாவும் இதுவரையில் வழங்கப்படவில்லையென்றும் இச்சங்கம் தெரிவித்துள்ளது. (சூ)

---

## நீ[illegible]டநேரம்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

70 கேள்விகளுக்குத் திருமதி காந்தி பதில் கூறினர்.

இந்திய மாநிலங்களில் பயங்கரவாத நடவடிக்கைகள் இந்திய பொதுத்தேர்தல், வெளிவிவகாரங்கள பற்றியும் கருத்துத்தெரிவித்த திருமதி காந்தி இந்திய பயங்கரவாதிகளுக்கு எதிராகக்கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினர்.

---

## இலங்கைத்தமி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திகதி இன்னமும் நிச்சயிக்கப் படவில்லை. திரு. ஜெயவர்த்தனவின் வேண்டுகோளின் பேரிலேயே அவரது இலங்கை விஜயம் ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கையில்இந்தியத்தமிழர்கள் கணிசமான தொகையினர் நீண்டகாலம் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தியாவில்பல்வேறுமக்கள் அமைதியுடனும்சமாதானத்துடனும்சுதந்திரத்துடனும்வாழ்வதுபோன்றே இலங்கையிலும் அந்நாட்டு மக்கள் அமைதியுடனும் சமாதானத்துடனும் வாழ் தையேஇந்தியா விரும்புகிறது.

### இலங்கை உள்விவகாரங்களில் தலையிடும்நோக்கமில்லை

இலங்கையினதும் மற்றும் வெளிநாடுகளினதும் உள்விவகாரங்களில் தலையிடும் நோக்கம் இந்தியாவுக்குக்கிடையாது தலையிடவும் மாட்டாது.

---

# பிரிட்டனின் சர்ச்சைக்குரிய அமைச்சர் இராஜினமா!

லண்டன், அக் 15

பிரிட்டனின் கைத்தொழில், வர்த்தக அமைச்சர் திரு சிசில் பார்க்கின்ஸன் நேற்று தமது பதவியிலிருந்தும் இராஜினமாச் செய்தார்,

திரு பார்க்கின்ஸன் தமது பெண்செயலாளருடன் கொண்டிருந்த இரகசிய உறவு அம்பலமானதையடுத்து ஏற்பட்ட நெருக்கடி நிலையை யடுத்தே பதவியை இராஜினமாச் செய்தார்.

'பிளக்பூலில்' நடந்துவரும் கன்சர்வேட்டிவ் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் அவா தமது இராஜினமாவை அறிவித்தார்; கன்சர்வேட்டிவ் ஆதரவாளர்களும், பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சரும் திரு பார்க்கின்ஸனின் இராஜினமாவை மிகுந்த கவலையுடனேயே ஏற்றுக்கொண்டனர். ஏனெனில் இவர் கடந்த ஜூனில் கன்சர்வேட்டிவ் கட்சி பொதுத் தேர்தலில் பலத்த வெற்றிபெற மூலகாரணமாக இருந்தார்.

''எனக்கு ஏற்பட்டுள்ள இக் கட்டான நிலையினுல் எனது கட்சிக்கும், பிரதமர் திருமதி தட்சர், அவரது அமைச்சரவைக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாதென்பதனுலேயே நான் எனது பதவியை துறக்கிறேன்'' என்று திரு சிசில் பார்க்கின்ஸன் தமது இராஜினமாவை அறிவிக்கும் போது தெரிவித்தார். (கி)

---

## மே. இந்தியா வெற்றி!

சிறிநகர், அக், 15

உலக கிரிகெட் சாம்பியனை இந்திய கிரிக்கெட் கோஷ்டியை மேற்கிந்திய கோஷ்டி ஒரு நாள் சர்வதேச ஆட்டத்தில் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 41 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 176 ஓட்டங்களைப்பெற்றது. மேற்கிந்தியா 22 ஓவர்களில்விக்கட் இழப்பின்றி 108 ஓட்டங்களை பெற்ற நிலையில் காலநிலை சீர்கேடு காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. ஒவ்வொரு ஓவர்களிலும் பெற்ற ஓட்ட விகிதத்தின் அடிப்படையில் மேற்கிந்திய கோஷ்டி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (கு)

---

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் நீலிப்பந்தனை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி அம்பாள் ஆலய புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 26-ம் திகதி காலை இடம்பெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்துதல் இம்மாதம் 25-ம் திகதி காலை இடம்பெறவுள்ளது. கிரியைகள் 22ம் திகதி ஆரம்பமாகும். கும்பாபிஷேகத்தை நயினை பிரதிஷ்டாபூஷணம் சிவ ஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் நடத்திவைப்பார்.

இவ்வாலயம் சுமார் 2 லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அராலியூர் ஸ்தபதி க. கோபாலசிங்கமும், தமிழகஸ்தபதிசேதுபதியும்ஆலயக் கட்டிட வேலைகளை மேற்கொண்டிருந்தனர்.

---

# மரண அறிவித்தல்

## தியாகராசா கலாதேவி

திருநெல்வேலியைச் சேர்ந்தவரும் வேம்படி மகளிர் கல்லூரி மாணவியுமாகிய தியாகராசா கலாதேவி காலமாகிவிட்டார். இவர் தியாகராசா, சரஸ்வதி ஆகியோரின் அன்புமகளும், சற்குணராசா, அருள்ராசா, ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் கணேசமூர்த்தியின் மச்சாளுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று (16-10-83) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலி மயானத்தில் நடைபெறும். உற்ருர், உறவினர் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

திருநெல்வேலி தகவல்; தியாகராசா 9349

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Number B 100236/81. Eelanadu-P. O. Box, 49, Telegram, Eelanadu, Telephone, 22389—24126.